

# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், மூன்று சட்டமன்றத் தொகுதிகளில் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 04.02.2025 செவ்வாய்க்கிழமை | மாலை 4.00 மணி | 1 | சைதாப்பேட்டை | எஸ்.பி.எஸ். திருமண மண்டபம், சைதாப்பேட்டை, சென்னை. |
| | | | மாதவரம் | ஜி.பி.எல். மஹால், லட்சுமிபுரம், கொளத்தூர், சென்னை. |
| 05.02.2025 புதன்கிழமை | மாலை 4.00 மணி | | வேளச்சேரி | கபாலி திருமண மண்டபம், காந்தி சாலை, வேளச்சேரி, சென்னை. |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 03-02-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

---

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில்

# பேறறிஞர் அண்ணா 56ஆம் ஆண்டு நினைவு நாள் பேரணி!

## டாக்டர் எ.வ.வே.கம்பன் தலைமையில் நடைபெற்றது!

திருவண்ணாமலை, பிப். 4 -

திருவண்ணாமலை மாவட்ட திமுக சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 56ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதி ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்திற்கு கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் தலைமையேற்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

நேற்று (03.02.2025 திங்கட்கிழமை) காலை 9.00 மணிக்கு, திருவண்ணாமலை, காந்தி சிலை அருகில் இருந்து பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாள் அமைதி ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்திற்கு கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் தலைமையேற்றார்.

மாவட்ட கழக அவைத் தலைவர் கோ.கண்ணன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க.சௌந்தரராசன், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அமைதி ஊர்வலம் காந்தி சிலையிலிருந்து தொடங்கி, கொசமடத் தெரு, கிருஷ்ணன் தெரு வழியாக அண்ணா சிலையை சென்றடைந்தது. பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். கழக முன்னோடிகள் மலர்த் தூவி மரியாதை செலுத்தினர்.

அமைதி ஊர்வலத்தில் ஒன்றிய செயலாளர் பெ.கோவிந்தன், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஏ.ஏ.ஆறுமுகம், கு.கணேஷ், பாலமுரளிகிருஷ்ணா, பச்சையம்மன் எஸ்.முத்து, சு.விஜி (எ) விஜயராஜ், எச்.சாதிக்பாட்சா, எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, உ.நித்யா, டாஸ்மாக் ஆறுமுகம் பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, க.பிரபாகரன், பேரூர் செயலாளர் மு.அன்பழகன், மாநகராட்சி மேயர் நிர்மலாவேல்மாறன், அன்பு. பாலாஜி, நகர நிர்வாகிகள் வட்டி அருணாச்சலம், ஜீவரேகாவிஜயராஜ், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, இல.குணசேகரன், ஹக்கிம் சேட், மண்டி ஏழுமலை, ஏந்தல் நாக.சங்கர் மாவட்ட துணை அமைப்பாளர்கள் மெட்ராஸ் கே.சுப்பிரமணி, டீக்கடை சீனுவாசன், அ.திவாகர், எம்.ஆர்.கலைமணி, எஸ்.சமயராஜ், ஏ.கே.ரத்தினகுமார், அ.மோகன்ராஜ், ஆ.தே.முருகையன், மு.பலராமன், எஸ்.பாபாஜான், ராயல், தியாகு, ஜி.சி.சங்கர், ஜீவிதாவைத்தியலிங்கம், சுனாபேகம், ஜெயமணி மூர்த்தி, வேணிஏழுமலை, கஸ்தூரி,

நகர இளைஞர் அணி அமைப்பாளர் மண்டி ஆ.பிரகாஷ், துணை அமைப்பாளர்கள் சச்சின். சபரி, கீழ்நாத்தூர் இராஜேந்திரன், எம்.எஸ்.டி.மணி, சந்தோஷ், யாதேஷ், சீனுவாசன் மற்றும் ஏந்தல் ஜி.நடராஜன், தினேஷ்சம்பத், ஆராஞ்சி சேகர், எம்.குணாளன், வட்ட செயலாளர்கள் அ.கோவிந்தன், வி.எஸ்.ரவிந்திரன், ராஜாமணி, சசிக்குமார், கோல்டு.மஞ்சு, தே.சங்கர், சி.கே.சசிக்குமார், கோ.தியாகராஜன், பி.ஜி.முருகன், ப.கண்ணன், ஐ.டி.தியாகு, வழக்கறிஞர். அருள், க.திலீப்குமார், பரமேஸ்வரன், பி.ஏ.டி.சி. ராஜி, எண்டைஸ்.துரை, கலைராஜா, அழகிரி, வ.சம்மந்தம், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக்கழக, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சோ.கி. மூர்த்தி

பிப்ரவரி 4 (2002)



கழகம் தொடங்கிய காலத்திலேயே உறுப்பினராகி, சென்னை, வடபழனி – கோடம்பாக்கம் பகுதியில் கிளைக் கழகத்தைத் தொடங்கியபோது, சென்னை மாவட்டக் கழகப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு கழகப் பணியாற்றினார்.

1953 முதல் கழகம் நடத்திய போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்று 18 முறை சிறை சென்றவர்.

பொதுக்குழு உறுப்பினராக, தலைமைக் கழக அலுவலக செயலாளராக பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, மாநகராட்சி நிலைக்குழுத் தலைவராகவும், சென்னை நகர வளர்ச்சி மேம்பாட்டுக்குழுத் தலைவராகவும் பொறுப்பேற்று சிறப்பாகப் பணியாற்றினார்.

இவரது தொண்டினைப் பாராட்டி தலைவர் கலைஞர் அவர்கள் தனது உடன்பிறப்புக்கான கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

# தமிழ்நாடு முழுவதும் பேரறிஞர் அண்ணா நினைவு நாள் பேரணி!





சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் பேரறிஞர் அண்ணாவின் 56வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அண்ணாவின் திருவுருவச்சிலைக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் சிவகங்கை மாவட்டக் கழக செயலாளர் கேஆர். பெரியகருப்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் எஸ்.சண்முக வடிவேல், விராமதி மாணிக்கம், பேரூர்கழக செயலாளர் ஆர்.கார்த்திகேயன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாளை முன்னிட்டு தக்கலை சந்திப்பில் உள்ள அண்ணாவின் திருஉருவச் சிலைக்கு குமரி மேற்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் மனோ தங்கராஜ் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். நிகழ்வில் கழகத்தினர் பலர் பங்கேற்றனர்.



திருவண்ணாமலை மாவட்ட திமுக சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 56ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, அவரது திருவுருவச் சிலைக்கு கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கோ.கண்ணன், கு.கருணாநிதி, எஸ்.பன்னீர்செல்வம், க.சௌந்தரராசன், ப.கார்த்திவேல்மாறன், பெ.கோவிந்தன், நிர்மலாவேல்மாறன், நா.பழனி, ஏ.ஏ.ஆறுமுகம் ஜெ.மெய்கண்டன், பாலமுரளிகிருஷ்ணா, உ.நித்யா, குட்டி புகழேந்தி உட்பட பலர் உள்ளனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 56–வது நினைவேந்தலை முன்னிட்டு இராமநாதபுரம் புதிய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் முன்னாள் அமைச்சர்கள் வா.சத்தியமூர்த்தி, டாக்டர் எஸ். சுந்தர்ராஜன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.கே.பவானி ராஜேந்திரன், ஆர்.கே.கார்மேகம், பிரவீன் தங்கம், குணசேகரன், ரவிச்சந்திர ராமவன்னி,கருப்பையா,மிசா அகமது தம்பி, மனோகரன், மாயகிருஷ்ணன், சண்முகநாதன், சாயல்குடி ஜெயபால், டி.ஜெயக்குமார், சக்தி, கதிரவன், குணசேகரன்,கே.ஜே.பிரவீன், முத்துக்குமார், நாகேஸ்வரன் உதயகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் பேரறிஞர் அண்ணாவின் 56வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது சிலைக்கு காரைக்குடி மாநகரச் செயலாளர் – துணை மேயர் நா.குணசேகரன் தலைமையில் மாநகர கழக நிர்வாகிகள் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.